Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 39

வியாழக்கிழமை
04 ஜனவரி 2024

மார்கழி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"உவையள்
தடுக்கிறதில காட்டுற
வேகத்தைவிட நுளம்புகள்
பெருகிற வேகம் தான்
கூடவாக் கிடக்கு
பாருங்கோ"



# 2027 வரையும் சவால்கள் தொடரும்!

## கூட்டு முயற்சி அவசியம் என்கிறார் அமைச்சர் பந்துல

**கொழும்பு, ஜனவரி 4**

**கடந்த ஆண்டைப் போன்று இந்த ஆண்டிலும் பொருளாதாரச் சவால்கள் தொடரும். எதிர்வரும் 2027ஆம் ஆண்டுவரையில் இந்த சவால்கள் நீடிக்கும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

11

## டெங்கைத் தடுக்க விசேட இலக்கம்

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுள்ள நிலையில், டெங்கைக் கட்டுப்படுத்துவதற்காக சிறப்பு அலைபேசி இலக்கம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

11

## டெங்குக் கட்டுப்பாடு தீவிரம் 23 பேருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், ஜன.4

டெங்கு பரவுதற்கு ஏதுவான நிலைமைகளைக் கொண்டிருந்த குடியிருப்பாளர்கள் 23 பேருக்கு எதிராக நேற்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 189 பேருக்கு எதிராக எச்சரிக்கைப் படிவம் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 114 பேர் டெங்குத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

11

## மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன.4

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று நீடித்தது.

பருத்தித்துறைக் கடற்பரப்புக்குள் அத்து

11

## மாணவச் செல்வங்களே!



**இன்று ஆரம்பமாகும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவச் செல்வங்கள் மிகச் சிறப்பாகப் பரீட்சையை எதிர்கொண்டு சிறந்த பேறுபேறுகளைப் பெறுவதற்கு 'உதயன்' தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றான்.**

## வவுனியாவில் ஒருவர் நேற்று திடீர் மரணம்!

### கொரோனா காரணமா?

வவுனியா, ஜன.4

வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர் நிமோனியா காரணமாக உயிரிழந்தார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

அநுராதபுரம், பதவியாவைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். சிறுநீரக நோய் காரணமாக மருத்துவமனையில் இவர் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார்.

முன்னதாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆயினும் நேற்றுமாலை மருத்துவமனை வட்டாரங்கள் அதை மறுத்தன. (அ-எ-110)

## வட்டு. இளைஞன் சாவு; மனித ஆட்கொலையே

### நீதிமன்றம் கட்டளை

யாழ்ப்பாணம், ஜன.4

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞனின் மரணம் "மனித ஆட்கொலை" என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் கட்டளை வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தார். அது தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதிவான் நீதிமன்றில்

11

### உயர்தரப்பரீட்சையின்

## நேர அட்டவணையில் மாற்றம் ஏதுமில்லை!

கொழும்பு, ஜன.4

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை நேர அட்டவணையில் எந்த மாற்றமும் இல்லை என்று பரீட்சைகள் திணைக்களம் "உதயனுக்கு" தெரிவித்தது.

11

### ரணில் வருகையின்போது

## எதிர்ப்புப் போராட்டங்களுக்கு தடை விதிக்க மன்று மறுப்பு!

### பொலிஸாரின் கோரிக்கை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணப் பயணத்தின்போது, அவருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவதற்குத் தடை வழங்கக்கோரிய யாழ்ப்பாணம் பொலிஸாரின் மனுவை, யாழ்ப்பாணம் நீதிமன்றம் நிராகரித்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளிலும், சந்திப்புகளிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

11

### ரணிலின் வருகைக்கு எதிர்ப்பு:

## ரயில் கடவைக்காப்பாளர்கள் பணிப்புறக்கணிப்பில் குதிப்பு

முல்லைத்தீவு, ஜன. 4

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு இன்று வரவுள்ள நிலையில் இன்று தொடக்கம் நாளைமறுதினம் 6ஆம் திகதி அதிகாலை 6 மணி வரையில் ரயில் கடவைக் காப்பாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு ரயில் கடவை காப்பாளர் சங்கத் தலைவர் றொகான் ராஜ்குமார் முல்லைத்தீவு மாவட்ட ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டார்.

'மாதம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்துக்கே நாம் பணியாற்றுகின்றோம். பொலிஸாரின் அடிமைகளாகவே எங்களை இன்னமும் வைத்திருக்கின்றார்கள். இப்போதைய பொருளாதார நிலைமையில் இந்தச் சம்பளம் போதாது. இதை வலியுறுத்தியே பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கின்றோம்' என்றார் ராஜ்குமார். (அ-ஒ-19)

## ஆணைக்குழுவை அமைப்பது காட்டிக்கொடுக்கும் செயலே

### பேரினவாதிகள் கூச்சல்

கொழும்பு, ஜன.4

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு உருவாக்கம் படையினரைக் காட்டிக்கொடுக்கும் செயல். அந்தச் சட்ட வரைவுக்கு அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கக்கூடாது என கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்

11

## யாழில் காணி உறுதி மோசடி; சட்டத்தரணிக்கு முன்பிணை

யாழ்ப்பாணம், ஜன.4

மோசடியாக எழுதப்பட்ட காணி உறுதிப்பத்திரம் தொடர்பான விசாரணைகளை எதிர்கொள்ளும் பிரசித்த நொத்தாரிசுவும் சட்டத்தரணியுமான ஒருவரை நிபந்தனையுடனான முன்பிணையில் செல்ல அனுமதி வழங்கி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் உள்ள காணி

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களுக்கு நடந்ததை மறக்கவேண்டாம்

கொழும்பு, ஜன. 4
மக்களை அடக்கி ஆள முற்பட்டால் என்ன நடக்கும் என்பதை ராஜபக்சக்களுக்கு நடந்த சம்பவத்தில் இருந்து சாகல ரத்நாயக்க போன்றவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும். மக்கள் கொதித்தெழுந்தால் அரியணைகூட மிஞ்சாது - என்று தேசிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

இதுதொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்ததாவது;

வற் பற்றிக் கதைப்பவர்களை மிரட்டும் வகையில் சாகல ரத்நாயக்க கருத்து வெளியிட்டுள்ளார். மக்களை மிரட்டுவதற்கு சாகல ரத்நாயக்கவுக்கு உள்ள அதிகாரம் என்ன? அவர் ரணிலின் சகா மட்டுமே. மக்களை எச்சரிக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை. சாகல போன்றவர்களால் இந்நாட்டு மக்களை மிரட்ட முடியாது.

தாங்கள் தான் ராஜா, ஏழு பரம்பரைகளுக்கு ஆட்சியில் இருப்போம் என்ற நினைப்பில் செயற்பட்ட ராஜபக்சக்களுக்கு இறுதியில் அரியணையில் இருந்து வெளியேற வேண்டியேற்பட்டது என்பதை சாகல போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மக்கள் விரட்டியடித்ததால் வெளிநாடுகள்கூட அவர்களை ஏற்காத நிலை காணப்பட்டது. எனவே, மக்கள்பலம் என்னவென்பதைப் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார். (ஒ-44)

# சர்வதேசத் தலைகுனிவு பெரமுனவுக்கு இல்லை



## கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 4

**பொதுஜன பெரமுன கட்சி நாட்டு மக்கள் முன்னிலையில் அடிபணிந்திருந்தாலும், சர்வதேசத்திடம் அடிபணியவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார். சிங்கள, பௌத்த சக்திகளின் ஆதரவைப் பெற்றிருந்த பொதுஜன பெரமுனக் கட்சி, போராட்ட காலத்தில் மக்கள் சக்தியிடம் அடிபணிந்தது. ஆனால் சர்வதேசத்திடம் அடிபணியவில்லை. நாம் போரை முடித்தோம், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ரணில் நியமிக்கப்பட்டார். ரணில் விக்கிரமசிங்கவால்தான் நாட்டைமீட்கமுடியும். அவர்தான் ஜனாதிபதி வேட்பாளர் - என்றார். (ச-44)



# பூநகரி அபிவிருத்தித் திட்டம் அதிகாரசபை தெளிவூட்டல்

யாழ்ப்பாணம், ஜன. 4
பூநகரி நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக தயாரித்த திட்டம் தொடர்பில் பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் பிரதேச பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் பூநகரிப் பிரதேசசபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், செ. கஜேந்திரன், பூநகரிப் பிரதேச செயலாளர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாணப் பணிப்பாளர் திஸநாயக்க, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் பங்கேற்றனர்.

2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் பூநகரி நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஜனாதிபதியால் 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-113)

# உயிர்வாழ் சான்றிதழ் பதிவுகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன. 4
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஒய்வூதியர்களின் இந்த வருடத்துக்கான உயிர்வாழ் நிலை சான்றிதழ் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம அலுவலர்கள் தமது பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களின் விவரங்களைப் பதிவுசெய்து வருகின்றனர். பிரதேசத்தில் வதியும் ஓய்வூதியர்கள் கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# கொக்குவில் உபஅலுவலகம் புதிய கட்டடத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 4
நல்லூர்ப் பிரதேசசபையின் கொக்குவில் உபஅலுவலகம் கடந்த முதலாம் திகதி புதிய கட்டடத்தில் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

முன்பு நல்லூர்ப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. இந்த நிலையில் நடராஜா வீதி, குளப்பிட்டிச் சந்தி கொக்குவில் எனும் முகவரியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் பொதுமக்களுக்கான சேவையை ஆரம்பித்துள்ளது என்று நல்லூர்ப் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)




# உடுப்பிட்டியில் நேற்று கடையடைப்புப் போர்!

உடுப்பிட்டிப் பகுதியில் மதுபானசாலையை மீண்டும் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதைக் கண்டித்து, நேற்று அந்தப் பகுதியில் கடையடைப்புப் போராட்டமும் கவனவீர்ப்பும் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்பில் உடுப்பிட்டிப் பகுதியிலுள்ள சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்த மதுபானசாலையை உடனடியாக மூடுமாறு வலியுறுத்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான மனுவை கரவெட்டி தெற்கு பிரதேச செயலாளரிடம் போராட்டக்காரர்கள் கையளித்தனர். (ம-100.66)

# பரீட்சை நிலையங்களில் புகை அடிக்கும் பணிகள்

யாழ்ப்பாணம், ஜன. 4
யாழ். நகரப் பிரதேசங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளின் பரீட்சை நிலையங்களைச் சுற்றி நுளம்புகளை விரட்ட புகை அடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாநகர சுகாதாரப் பிரிவினர் கடந்த இரு நாள்களாக இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் பரீட்சை நிலையங்களைச் சுற்றி தூய்மையாக்கும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)

# வடக்கு சுகாதார அமைச்சு முன்னேற்றங்கள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 4
வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் விசேட துறைசார் கலந்துரையாடல் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் செயலாளர் ம. ஜெகூ தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் துறைசார் பிரச்சினைகள், தேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

கலந்துரையாடலில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளர், பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர், துறைசார் திணைக்களங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-66)



# சட்டவிரோத மரக்குற்றிகளை வைத்திருப்பின் தண்டனை

யாழ்ப்பாணம், ஜன. 4
சட்டவிரோதமான மரக்குற்றிகளை உடைமையில் வைத்திருப்போருக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு மற்றும் விலையுயர்வை அடுத்து யாழ். மாவட்டத்துக்கு அதிகளவான காட்டுமரங்களுள் ஒன்றான வீரைமரக்குற்றிகள் எடுத்துவரப்படுகின்றன. மரக்குற்றிகளை - விறகுகளை உடைமையில் வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் வனவளத் திணைக்களத்தினர் குறிப்பிட்டனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காற்றாலை; ஜனாதிபதியுடன் பேச்சு

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு

யாழ்ப்பாணம், ஜன.4

**மன்னாரில் இரண்டாம் கட்டமாக காற்றாலை அமைப்பது தொடர் பாக - மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக - வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள் 6 பேர் ஜனாதிப தியைச் சந்தித்துப் பேசுவதெனத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.**

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் காதர் மஸ்தான் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது.

இதில் மன்னாரில் அமைக்கப்படவுள்ள இரண்டாம் கட்ட காற்றாலை மின்திட்டத்துக்கு சமூக அமைப்புகளின் பிரதி நிதிகள் , அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். கடந்த மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் காணி அப கரிப்புக்கான நடவடிக்கையை நிறுத்தும்படி தீர்மானம் உள்ளபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்றும் சுட்டிக்காட்டினர்.

அதற்கு காணி அமைச்சின் பணிப்புக்கமையவே மன்னார் பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த திட்டத்துக்கு குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்ப டாதபோதும் அமைச்சுத் தீர்மானத்துக்கு அமையவே காணி சுவீகரிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதால் விரைவில் ஜனா திபதியை சந்தித்துப் பேசுவதற்கு வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள் முடிவு எடுத்துள்ளனர். (ச-60)



## விவசாயிகளுக்கு ஜப்பானின் உரம்

கிளிநொச்சி, ஜன. 4

ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுத வியில் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பால் கிளி நொச்சி விவசாயிகளுக்கு மற் றொரு தொகுதி உரம் விநியோகிக் கப்படுகிறது. 1.02ஏக்கர் நிலங்க ளில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கே உரம் வழங்கப் படுகிறது. (ச-113)



## வனமூடுகை செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப் புத்திணைக்களத்தால் வனமூடுகை செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மண்டைதீவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பங்களை வலுவூட்டுவதும் வனஅடர்த்தியைப் பேணலும் இதன் பிரதான நோக்கங்களாகும். அதன்படி நேற்றுமுன்தினம் மண் டைதீவு ஜே/8 கிராம அலுவலர் பிரிவில் குறித்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பயன்தரு மரக்கன்றுகள், பழ மரக்கன்றுகள் என்பன இதன்போது விநியோகிக் கப்பட்டன. (ச-125)



## பழுதடைந்த விதை உ.கிழங்கு

# கிளிநொச்சியில் புதைக்கப்பட்டது

கிளிநொச்சி, ஜன. 4

நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கக் கொண்டு வரப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்ட நிலையில் பழுதடைந்த விதை உருளைக்கிழங்கு கிளிநொச்சி மாவட்டத்தின் முறி கண்டி - அக்கராயன் வீதியில் 5ஆவது மைல் கல்லிலி ருந்து 500 மீற்றர் தூரத்திலுள்ள காட்டில் நேற்றுமுந்தி னம் இரவு புதைக்கப்பட்டுள்ளது. (ஒ-113-19)

# நுளம்பைக் கட்டுப்படுத்துங்கள்!

கொடிகாமம், ஜன. 4

தென்மராட்சியில் பூட்டிய வீடு கள் மற்றும் காணிகளை வைத் திருப்பவர்கள் தமது வளவுக ளில் நுளம்பு பெருகும் இடங் கள் இல்லை என்பதை உடனடி யாகப் பரிசோதித்து உறுதிசெய்து கொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

நீர்த்தொட்டிகள், கூரைப் பீலி கள், இளநீர் கோம்பைகள், பூச்சாடிகள், திறந்த கிணறுகள், மலசல கூடங்கள், மரப்பொந்து கள் போன்றவற்றின் மீது கவ னம் செலுத்தப்படல் வேண்டும். அயலில் வசிப்பவர்களிடம் உங் களைத் தொடர்பு கொள்ளும் வகையில் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற வற்றை கொடுத்து வையுங்கள். டெங்குத் தடுப்பு நடவடிக்கைக ளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுப்பவர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை மேற்கொள் ளப்படும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-159)

# புதினம் தெரியுமோ?

**வெள்ளம் வந்த பிறகு அணை கட்டுறதும், வெள்ளம் வடிஞ்ச பிறகு அந்த அணையைப் பற்றி மறந்து போறதும் எங்கட பரம்பரைப் புத்தி. அதோட திரும்ப ஒருக்கா வெள்ளம் வரேக்கதான் முந்திக் கட்டின அணை எங்க எண்டு தேட வெளிக்கிடுவம். வெள்ளம் வந்தாலாவது ஒரளவுக்கு மேட்டுப்பக்கம் போய்ச் சமாளிச்சுப் போடலாம். ஆனால் சுனாமி வந்தால் சமா ளிக்க ஏலுமோ? வந்தவேகத்திலையே எல் லாத்தையும் அடியோட அள்ளிக் கொண்டு போடுமெல்லோ. 'சுனாமியைப் பற்றியும் பயப் பிடத் தேவையில்லை. சுனாமி வரப்போகு தெண்டா கடலுக்க பூட்டியிருக்கிற எச்சரிக்கைக் கோபுரத்தில இருந்து முதலே அபாயச்சத்தம் வந் திடும். அது கேட்டவுடன பாதுகாப்பான இடத்துக்குப் போகலாம். சும்மா சுனாமி கினாமி எண்டு பேய்க்காட்ட வேண்டாம்' எண்டு நீங்கள் ஆரும் நினைப்பியள். உங்கட நினைப்பில மண் ணள்ளிப் போடுற மாதிரியான சங்கதி ஒண்டிருக்கு.**

**இப்ப அடிக்கடி யாவா, மாலைதீவுப் பக்கமா நிலம் அதிரத் தொடங்கியிருக்கு. இந்த அதிர் வுக்கெல்லாம் சுனாமி இஞ்சாலிப் பக்கம் வராட்டியும், நிலத்துக்கு கீழ இருக்கிற புவியோடு ஒண்டுக்கொண்டு திரும்பவும் முட்டுப்படுகிற தாலதான் இந்த அதிர்வுகள் அடிக்கடி வரத் தொடங்கியிருக்கு. ஒருகட்டத்தில நல்லா முட் டுப்படேக்க பெரிசா அதிரும். அப்பதான் சுனா மிக்கு சான்ஸ் இருக்கு. எண்டாலும் இப்பவே அலேர்ட்டா இருந்தா நல்லதெண்டு, இலங் கையைச் சுத்தி இருக்கிற சுனாமி எச்சரிக்கை கோபுரங்களின்ர சிக்னலை 'செக்' பண்ணிப் பார்த்திருக்கினம். இலங்கையில 2004 இல சுனாமி அடிச்சபிறகு 77 சுனாமிக் கோபுரங்களை கடலில விட்டவை. ஆனால் அதில இப்ப வெறும் 20 தான் வேலை செய்யுதாம். மிச்சம் 57 கோபுரங்களும் அவுட்டாப் போச்சுதாம். இந்தக் கோபுரங்கள் தான் சுனாமி வந்தால் காட்டிக் குடுக்கும் எண்டு இவ்வளவு நாளும் நம்பிக் கொண்டிருக்கிறம்.**

**அதுசரி, இருபது கோபுரங்கள் வேலை செய் யேக்க, மிச்சம் 57 கோபுரங்களும் எப்பிடி பழுதாப் போச்சுது எண்டொரு சந்தேகம் எல்லாருக்கும் இருக்கும். இந்தியாவில இருந்து இஞ்சாலிப் பக்கம் மீன்பிடிக்க வாறவை, பொழுதுபோகாட்டி இந்தச் சுனாமிக் கோபுரங்களில இருக்கிற பற்றறி, சோலர் எல்லாத்தையும் கழட்டிக் கொண்டு போடுவினம். அதாலதான் அதுகள் இப்ப சத்தம் போட முடியாமல் கடலுக்க நீந்தி விளையாடிக்கொண்டிருக்குதாம்.**

**இனியும் நீங்கள் சுனாமிக் கோபுரத்தை நம்பிக்கொண்டிருந்தால் சமாதிதான் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## கடகம்

எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாது சந்தர்ப்ப சூழ்நிலையை உணர்ந்து சமயோசித புத்தியுடன் பேசும் நீங்கள் அடங்கி எழுபவர்கள். தும்பைப் பூப் போல சிரிப்பு, துடிப்பான செயற்றிறனும் கொண்ட நீங்கள், நம்பி வந்தவர்களை ஒருபோதும் கை விட மாட்டீர்கள்.

உங்கள் ராசிக்கு தன வீடான 2ம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் சோர்ந்து முடங்கிக் போயிருந்த உங்கள் உள்மனதில் தன்னம்பிக்கை பிறக்கும். புதிய திட்டங்கள் நிறைவேறும். ஒத்து வராத, உதவாத, உண்மையில்லாத உறவுகளை ஒதுக்கித் தள்ளுவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். 30.4.2024 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 10வது வீட்டில் தொடர்வதால் அதுவரை வேலைச்சுமை அதிகமாக இருக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். பிரபலங்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கவனமாகக் கையாளுங்கள். பழைய கடன் பிரச்சினைகள் அவ்வப்போது மனசை வாட்டும். ஊர் பொது விவகாரங்களில் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்வீர்கள். உத்தியோகத்திலும் மறைமுக எதிர்ப்புகளும், இடமாற்றங்களும் வரக்கூடும். எனவே அலுவலகத்தில் அதிக பேச்சை தவிர்ப்பது நல்லது.

1.5.2024 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் லாப வீட்டில் அமர்வதால் எதிர்பாராத திடீர்ப் பணவரவு உண்டு. ஏதோ ஒன்றை இழந்ததைப் போல இருந்தீர்களே! அந்த நிலை மாறி உற்சாகம் அடைவீர்கள். தீவிரமாக வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். தற்காலிகப் பணியில் இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவீர்கள். மூத்த சகோதரர் பகையை மறந்து வலிய வந்து பேசுவார்.

ராகு இந்த வருடம் முழுவதும் 9ம் வீட்டில் அமர்வதால் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். தந்தையாரின் உடல் நிலை பாதிக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும்.

கேது 3ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். தாயாரின் உடல் நிலை சீராகும். விலை உயர்ந்த ஆபரணங்கள், ரத்தினங்கள் வாங்குவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள், தொழிலதிபர்கள் உதவுவார்கள். பழைய வீட்டை நல்ல விலைக்கு விற்று புது இடம் வாங்குவீர்கள்.

வருடம் முழுவதும் அஷ்டமத்துச் சனி தொடர்வதால் முன்கோபம், பதற்றம், சிறு சிறு ஏமாற்றம், வீண் பழி வந்துசெல்லும். மனதில் இனம்புரியாத பயம் வந்துபோகும். முன்யோசனை இல்லாமல் முக்கியமான ஆவணங்களில் கையெழுத்திட வேண்டாம். அரசு காரியங்கள் இழுபறியாகும். யோகா, தியானத்தில் ஈடுபடுவது நல்லது.

**வியாபாரிகளே!**

சந்தை நிலைவரம் குறித்து முழுமையான அறிவு கிடைக்கும். ஜனவரி, மே, ஜூன் மாதங்களில் வியாபாரம் சூடு பிடிக்கும்.

**உத்தியோகஸ்தர்களே!**

பெரிய பதவியில் அமர்த்தப்படுவீர்கள். பணிகளை திறம்பட முடித்து எல்லோரையும் வியக்க வைப்பீர்கள்.

**இந்தப் புத்தாண்டு குரு பகவானின் ஆதரவால் சாதிக்கும் ஆண்டாக அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.




# 'தெய்வ தர்சனம்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 4

பொங்கல் விழாவையொட்டி 'தெய்வ தர்சனம்' எனும் நூல் வெளியீட்டு விழா அருள்மிகு ஞான வைரவர் கோவில் மண்டபத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஸ்ணஐயர், துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சற்குணராஜா, யாழ்.மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன், கலாநிதி ஆறு திருமுருகன், இரா. செல்வவடிவேல் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஞான வைரவ ஆலய நிர்வாக சபையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ரி)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 4

ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் எழுதிய 'அரசியல் பொருளாதாரம், தத்துவம் ஒரு பார்வை' நூல் வெளியீட்டு நிகழ்வு இராமநாதன் வீதியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வாழ்த்துரையை சமூக சேவையாளரும், ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான ந.ஜெகநாதன், வெளியீட்டுரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகையின் ஆசிரியருமான க.தணிகாசலம், நூல் மதிப்பீட்டுரையை அரசியல் சமூகச் செயற்பாட்டாளரும், ஓய்வுநிலை அதிபருமான க.அருந்தவபாலன், ஏற்புரையை நூலாசிரியர் பி.முத்துலிங்கம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அப்பாவிகளின் அடுப்பங்கரைக்கும் ஆபத்து!

இலங்கையின் 31 வீதமான சொத்துகள் வெறும் ஒரு வீதமான நபர்களிடமே குவிந்திருக்கின்றன என்ற தகவல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. 50 வீதமான இலங்கையர்கள், நாட்டின் ஒட்டுமொத்த சொத்துக்ளில் வெறும் 4 வீதமான சொத்துகளையே வைத்திருக்கின்றனர் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இலங்கை அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாடு. ஆனால், இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற இந்தப் புள்ளிவிவரத்துக்கும், அபிவிருத்தியடைந்துவரும் நாடாக இலங்கை தொடர்ந்தும் இருப்பதற்கும் கிஞ்சித்தும் தொடர்பில்லை என்பதே உண்மை. 50 வீதமான மக்கள் நாட்டின் சொத்துகளில் வெறும் 4 வீதத்தை மட்டுமே உடைமையில் வைத்திருப்பது என்பது 'வறிய' அல்லது 'அபிவிருத்தி அடையாத' நாட்டுக்கே உரித்தான இலக்கணம். ஆதலால், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இந்த அறிக்கை உண்மையில் ஓர் ஆபத்தம்சமே.

புத்தாண்டு பிறந்த கையுடன், இலங்கையை 'மீட்கும்' பெயரில் புதிதுபுதிதாக வரிகள் பீறிட்டு வெளிக்கிளம்பியுள்ளன. எங்கும் வரி, எதிலும் வரி. வரி... வரி... வரி... வரி என்ற கூச்சல்களும் அறிவிப்புகளுமே நாட்டில் வெளிவந்தபடியிருக்கின்றன. பொருள்களின் விலைகள் எக்கச்சக்கமாக எகிறியிருக்கின்றன. ஐ.நா. செயற்றிட்டம் வெளியிட்ட புள்ளிவிவரத்துக்கும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் விதிக்கப்பட்டிருக்கும் வரி விதிப்புகளுக்கும் நெருக்கமான தொடர்புண்டு. 'வரி பொதுவானது' என்று பூசி மெழுகினாலும், நாட்டின் பொருளாதாரம் பொதுமைப்பாடாக இல்லாத பட்சத்தால் இந்த வரி விதிப்புகளானவை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாய வர்க்க வேறுபாடுகளில் கனதியான தாக்கம் செலுத்தக்கூடியன. வெளிப்படையாகச் சொல்வதாயின், நாட்டின் 31 வீதமான சொத்துகளைத் தம்வசம் வைத்திருக்கும் ஒரு வீதமான இலங்கையர்களின் பொருளாதாரத்தில் இந்த வரிகள் எந்தவொரு தாக்கத்தையும் - ஆட்டத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. ஆனால், 4 வீதமான சொத்துகளை வைத்திருக்கும் 50 வீதமான மக்கள் தள்ளாடித் தடுமாறப் போகின்றார்கள். 'வாழ்வதற்காகப் போராடுவதா? அல்லது போராடிக்கொண்டே வாழ்வதா?' என்ற நிலை அவர்களுக்கு. ஆதலால், சொத்திழப்பு என்பது இங்கு இயல்பாக வந்தமையப்போகின்றது.

இந்த நிலை நீடிக்க நீடிக்க, மறுமுனையில் 'பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் போன்று' நாட்டிலுள்ள 50 வீதத்துக்கும் அதிகமானவர்களின் சொத்துகள் சுருங்கிக் குறுகத்தலைப்படும். இதன் விளைவாக, தற்போது 31 வீதமான சொத்துகளை வைத்திருக்கும் ஒரு வீதமான இலங்கையர்களின் சொத்துகள் அதிகரித்துச் செல்லும். இவ்வாறிருக்கையில் வரி எவ்வாறு பொதுவானதாகும்? என்ற கேள்வி இங்கு இயல்பாகவே எழுகின்றதல்லவா?

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமாயின் வரிகள் அவசியம்தான். அதை மறுப்பதற்கில்லை. இதை மறுத்துரைப்பவன், 'தேசியப் பொருளாதாரத்தையும், அதன் வர்த்தகச் சுழற்சியையும்' அறியாதவனாகின்றான். ஆனால், வரிகள் எவ்வளவுக்கு எவ்வளவு அறவிடப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்கத்தேய நாடுகள் பல இலங்கையை விஞ்சும் வரி விதிப்புகளை இன்று கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த வரி வசூலிப்புகளை வைத்து அந்த நாடுகள் தம் மக்களுக்கு வழங்கியிருக்கும் வாய்ப்புகளும் - சலுகைகளுமே மக்கள் எந்தச் சலனமுமற்று வாழ்வதற்குக் காரணமாகியிருக்கின்றன.

**திறைசேரியைத் திவாலாக்கியவர்கள் எங்கோ இருக்கையில், அப்பாவிகளின் அடுப்பங்கரையைச் சுரண்டுவதெல்லாம் அபத்தத்திலும் அபத்தம்.**



# அகதி வாழ்க்கை முடிவு கட்டுங்கள்!

## ரொஹிங்கியா அகதிகள் ஆர்ப்பாட்டம்

**கொழும்பு, ஜன. 4**

**இலங்கையில் தங்கியுள்ள ரொஹிங்கியா முஸ்லிம் அகதிகள் கொழும்பிலுள்ள ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐ.நா.அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திடம் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். மியான்மர் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி மீளத் தாயகம் திரும்பச் செய்தல் அல்லது இலங்கையில் பிரஜாவுரிமை வழங்குதல் இல்லாவிடின் ஏதாவது வெளிநாட்டுக்கு அனுப்புதல் ஆகிய கோரிக்கைகளில் ஏதாவதொன்றைச் செயற்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-6)

## பெரமுனவின் கதவு திறந்தே இருக்கிறது

கொழும்பு, ஜன. 4

பொதுஜன பெரமுனக் கட்சியில் இருந்து விலகியவர்கள் மீண்டும் எம்முடன் இணைந்து பயணிப்பதற்கான கதவு திறந்தே உள்ளது என்று அந்தக் கட்சியின் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த ஷான் விஜயலால் எதிரணிக்குச்சென்றது எமக்குத் தாக்கம் அல்ல. எமது கட்சிக்கு எதிராக கடந்த காலங்களில் 'ஹெலிகொப்டர் கூட்டணி' எனப் பல கூட்டணிகள் அமைக்கப்பட்டன. அவை தற்போது உடைந்துவருகின்றன- என்றார். (ச-44)

## சஜித்தின் கூட்டணி எமக்குச் சவாலல்ல

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள எதிரணிக் கூட்டணி தமது அணிக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

'குப்பை குப்பையோடுதான் சேரும். ஷான் விஜயலால், ஜி.எல்.பீரிஸ், நாலக கொடஹேவா போன்றோர் அமைச்சர்களாக, முதலமைச்சர்களாக பதவி வகித்தவர்கள். அமைச்சரவையில் இருந்த போது பாதகமான விடயங்களுக்குக் கை உயர்த்தியவர்களே இவர்கள். குப்பைகள் ஓர் இடத்தில் குவிவது நல்லது. அப்படியே துடைத்து எறிந்து விடலாம். குப்பைகளைத் துடைத்தெறிந்து நாட்டைத் தூய்மையாக்க நாம் தயார்' - என்றார். (ஒ-44)

## இணைய சேவையில் கிராம அலுவலர்கள்

இணையவழியில் கிராமஅலுவலர்களிடமிருந்து தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான பொறிமுறையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரித்துள்ளார்.

இந்தப் பொறிமுறையூடாக கிராமஅலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்களிடமிருந்து மக்கள் தமக்குத்தேவையான சான்றிதழ்களையோ ஏனைய விடயங்களையோ பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

## இலங்கையில் தடையின்றி நீர்மின்சாரம்

இலங்கையிலுள்ள நீர்நிலைகள் அனைத்தும் ஏற்கனவே நிரம்பியதால் நீர்மின்சாரம் தடையின்றி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக முதல் காலாண்டில் குறைந்த மின்கட்டண அறவீடே மேற்கொள்ளப்படவுள்ளது. நீர்நிலைகள் நிரம்பியதால் நீர்மின்சாரத்தை தங்கு தடையின்றி வழங்கக்கூடிய நிலை காணப்படுவதாக இலங்கை மின்சாரசபை பதில் பொது முகாமையாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார். (ரி-6)

### நாளை

**05.01.2024**

**வெள்ளிக்கிழமை**

**மார்கழி 20**

சுபநேரம் : 06.31 - 08.01

ராகுகாலம் : 11.01 - 12.31

### நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் தவறுகளே செய்யவில்லை என்றால்,**
**நீங்கள் எதுவுமே செய்யவில்லை..**

**- ஜான் வூடன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர்தரப் பரீட்சையும் அதற்கான தயார்ப்படுத்தலும்

அம்பலவாணர் லோகநாதன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகின்றன. கடுமையான பயிற்சிகள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் பல்வேறு தியாகங்கள் மூலமாக தாம் கற்றுக்கொண்டவற்றை வெளிப்படுத்தி, வாழ்வில் அடுத்தகட்டத்துக்குச் செல்லவேண்டிய தீர்க்கமான காலப்பகுதியில் மாணவர்கள் இன்றிருக்கின்றனர். இந்தப் பரீட்சையை எவ்வளவுக்கெவ்வளவு திடமான மனதுடனும், தெளிவான அறிவுடனும் மாணவர்கள் எதிர்கொள்கின்றார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது அவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

ஆசிரிய சேவையில் இருந்த போது பலவருடங்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தர இரசாயனவியல் பாடத்தைக் கற்பித்த அனுபவங்கள் மற்றும் பரீட்சை மேற்பார்வைக் கடமைகளில் ஈடுபட்ட அனுபவங்கள் வாயிலாக, பரீட்சையை மாணவர்கள் எந்தச் சிரமுமின்றி எதிர்கொள்வதற்கு ஏதுவாக இருக்கின்ற சில வழிமுறைகள் தொடர்பில் இங்கு தெளிவூட்டுகின்றேன்.

உடல்நலம், நித்திரை நேரம், சுட்டெண், வினாத்தெரிவு, தெளிவான எழுத்துக்கள், விடையளித்தல், பக்க ஒழுங்குகளுடன் ஒப்படைத்தல் என்பவற்றை முதன்மைப்படுத்தி இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. இவற்றின் ஊடாக நோக்குகையில்,

மாணவர்களே! உங்களின் உடல்நலத்தில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். இக்காலங்களில் பொருத்தமற்ற, ஒவ்வாமைகளை ஏற்படுத்தக்கூடிய உணவுகள் மற்றும் நீராகாரங்களைத் தவிர்ப்பது நல்லது. அத்துடன், பரீட்சைக்கு முன்பு நீண்ட நேரங்களாக இரவு பகலாகக் கற்றாலும் பரீட்சைக்கு முதல் நாளில் நீண்டநேரம் கண்விழித்து கற்பது மறுதினம் பரீட்சை மண்டபத்தில் நீங்கள் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் செயற்படுவதற்கு சாதகமாக அமையமாட்டாது. எனவே பரீட்சைக் காலத்தில் போதியளவு தூக்கத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பரீட்சை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்துக்கு முன்பாக, பரீட்சை நிலையத்துக்குச் சமுகமளிப்பது நல்லது. இது பல்வேறுபட்ட பதற்றங்களைச் சமாளிக்கவும் உதவும். மேலும் எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியிருக்கின்றதோ, அத்தனை வினாக்களுக்கும் விடையளிப்பதற்கு முழு வீச்சுடன் செயற்பட வேண்டும். ஒவ்வொரு விடைத்தாள்களிலும் சுட்டெண்ணை எழுதுவதற்குத் தவற வேண்டாம். ஒவ்வொரு விடைத்தாளிலும் மிகத்தெளிவாக சரியான சுட்டெண்ணை எழுதப்பழக வேண்டும்.

வினாத்தெரிவும் மிகவும் அவசியமானது. வினாத்தாள்களை பெற்றவுடன் விடையளிக்க முயற்சிக்க வேண்டாம். தயவுசெய்து சில நிமிடங்கள் பொறுமையுடன் வினாக்களை வாசித்து மிகவும் சிறப்பாக விடையளிக்க வேண்டும். எந்த வினாக்களுக்கு விடையளிக்கப் போகின்றீர்கள் என்பதை முன்னுரிமையின் அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ளுங்கள். தெரிவுசெய்யும் வினாவின் இலக்கத்தை தெளிவாக எழுதி விடையளித்துக் கொள்ளுங்கள்.

தெளிவான எழுத்துகளில் விடையளிக்க முயற்சிக்கவும். எழுத்து எல்லோருக்கும் உறுப்பாக அமைவதில்லை. அவ்வாறான மாணவர்கள் பெரிய எழுத்துக்களில் எழுதப்பழகிக்கொள்ள வேண்டும்.

மேலும் விடையளிக்கும்போது இரண்டாம் பகுதியில், வினாவின் விடைகளை விடைத்தாளில் புதிய பக்கங்களில் ஆரம்பிக்கவும். ஒரு சுற்றில் முதலாம் வினாவிலிருந்து இறுதி வினாவரை விடையளித்துச் செல்லும் போது இடையிடையே கடினமெனக் கருதும் வினாக்களை குறித்துவைத்து அடுத்த சுற்றில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிப்பது நல்லது.

விடைத்தாள்களை உரிய ஒழுங்கில் உங்களுக்கென வழங்கப்பட்ட நூலால் இறுக்கமாக கட்டப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். ஒவ்வொரு பரீட்சையும் நிறைவடைந்து வெளியே வரும்போது, முற்றுப்பெற்ற பரீட்சையின் விடைகள் தொடர்பாக யாருடனும் கலந்துரையாட வேண்டாம்.

பரீட்சைகள் யாவும் முடிந்த பின்பு விடைகளைப்பற்றி ஆராய்வதே பொருத்தமானதாகும் என்பதையும் கவனத்திலெடுங்கள்.




## றோட்டரிக் கழக பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட றோட்டரிக் கழகத்தின் வருடாந்தப் பொதுகூட்டம் அண்மையில் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றது. இலங்கை றோட்டரிக் கழகத்தின் ஆளுநர் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தலைவருமான றோட்டேரியன் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-125)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் இடம்பெற்றது. (ச-159)



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக கைத்தொழில் பிரிவினரால் மாதாந்தச் சந்தை நிகழ்வு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-66)



பளை, தர்மக்கேணி அ.த.க.பாடசாலையில் மதிப்பளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோருக்கு பிரிவுபசாரமும், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றன. (சு-9)

அராலி தெற்கு சைவத்தமிழ் இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சுனாமிப் பேரலை ஞாபகார்த்த வருடாந்தக் குருதிக் கொடை முகாம் நிகழ்வு அண்மையில் அராலி தெற்கு கரைப்பிட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்தக் குருதிக் கொடை முகாமில் 44 பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். (ம-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு




எமது பாடசாலையின் ஆசிரியராக கடமையாற்றி இன்று (04.01.2024) வியாழக்கிழமை மணிவிழாக்காணும்

## வேலாயுதம் இரத்தினபாலன்

### (SLTS -I, Primary Trained)

அவர்கள் தமது ஓய்வு காலத்தில் மகிழ்வுடனும், சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**சேவை விபரம்**

- யா/ உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை - 1989.11.28 - 1993.01.31 வரை
- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - 1993.02.01 - 1994.12.31 வரை
- யா/ உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை - 1995.01.01 - 2014.01.06 வரை
- யா/ நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை - 2014.01.07 - 2024.01.03 வரை

வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்**
**யா/நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை.**

(cs.27540) (N.1)

# யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடைகள் Stage 1,2,3 கல்வியங்காடு, குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கோரல்

1. யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடை, கல்வியங்காடு கீழ்வரும் கடைத் தொகுதி கள் குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | அமைவிடம் | தரைப்பிரதேசம் (சதுர அடி) | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | செங்குந்தா சந்தைக்கடை Stage 3 கீழ் தளம் கடை இலக்கம் 01 | 147 sq.ft | 15,750.00 | 1,260,000.00 |
| 02 | செங்குந்தா சந்தைக்கடை Stage 3 கீழ் தளம் கடை இலக்கம் 02 | 231 sq.ft | 24,750.00 | 1,980,000.00 |
| 03 | செங்குந்தா சந்தைக்கடை Stage 1,2,3 மேற்தளம் மண்டபம் கடை இலக்கம் 01 | 2329 sq.ft | 195,000.00 | 15,600,000.00 |
| 04 | செங்குந்தா சந்தைக்கடை Stage 3 கீழ் தளம் கடை இலக்கம் 01 | 883 sq.ft | 90,000.00 | 7,200,000.00 |
| 05 | செங்குந்தா சந்தைக்கடை Stage 2 கீழ் தளம் கடை இலக்கம் 09 | 124 sq.ft | 13,500.00 | 1,080,000.00 |

2. சமர்பிக்கப்படும் விலைமனுக்களில் கோரப்பட்ட அதிகூடிய விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 இனை செலுத்தி மாநாகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில 04.01.2024 ஆம் திகதி முதல் 23.01.2024 ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக செலுத்துதல் வேண்டும்.

5. விலை மனுக்களை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் / நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவங்களை ஏற்கும் பெட்டியில் இடுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தபால் உறையின் மேல் மூலையில் கேள்வியின் விபரம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விலை மனுக்களை ஏற்றல் 24.01.2024 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவடைந்ததுடன் மாநகர சபையின், பௌதிக திட்டமிடல் கேட்போர் கூடத்தில் 24.01.2024 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமுகமளித்தல் வேண்டும்.

7. இதுபற்றிய மேலதிக தகவல்கள் அல்லது நிபந்தனைகள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியின் 021-221 5978 தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்வதன் மூலம் அல்லது அலுவலக நேரங்களில் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

**ஆணையாளர்**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr.41456) (N.1)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-09, காங்கேசன்துறை வீதி, 693/4, 693/5, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் (தனது அற்றோனி தத்துவக்காரர் சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரம் மூலம்) 22.08.1988ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2368ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம், கந்தையா அரியநாயகமும் பெண் கமலாம்பாளுக்கும் நிலப்பரப்பு 01 குளி 12.30 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் (தனது அற்றோனி தத்துவக்காரர் சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரம் மூலம்) 22.08.1988ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2369ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் சண்முகம் கார்த்திகேசு தனபாலசிங்கமும் பெண் தனலட்சுமிக்கும் நிலப்பரப்பு 01 குளி 8.25 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் (தனது அற்றோனி தத்துவக்காரர் சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரம் மூலம்) 22.08.1988ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2370ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம், கந்தையா திருலோகநாதன் பெண் புஸ்பராணிக்கு நிலப்பரப்பு 02 குளி 6 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை சங்கரப்பிள்ளை திருஞானசுந்தரமும் பெண் இரத்தினம்மாவும் 02.03.1989ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 2566ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம், கண்ணுத்துரை தேவதாஸ் என்பவருக்கு நிலப்பரப்பு 01 குளி 15.79 இனை வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கை இலக்கம் 26/2 ஐ, சேர்ந்த கார்த்திகேசு தனபாலசிங்கமும் தனபாலசிங்கம் தனேந்திராவும் ஆகிய அவர்கள் 21.03.2005 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மாணிக்கம் தியாகராசா முகதாவில் 7938ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் கனகரத்தினம் அன்ரன் ரட்ணதீபன் பெண் தனஜாவுக்கு வழங்கியுள்ளனர்..

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "வாரிவளவு" நிலப்பரப்பு 9 குளி 12.30. இதில் முன்பே அறுதி விற்றவை போக மிகுதியில் நிலப்பரப்பு ஒன்று குளி எட்டு தசம் இரண்டு ஐந்து (நில பர. 1 குளி 8.25) இது நில அளவையாளர் வி.நகுலேஸ் அவர்களால் 15.6.1988ல் 162ஏ இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 5 என காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை.

கிழக்கு: க. திருநாவுக்கரசுவிற்கும் மறுபெருக்குமுரிய ஆதனங்கள்.
வடக்கு: குறித்த படத்தில் துண்டு 4ற்குச் சொந்தக்காரர்களான பாலசிங்கம் உதயகுமாரும் பெண் தவமணிக்கும் உரிய ஆதனங்கள்.
மேற்கு: குறித்த படத்தில் 7ஆம் துண்டாகிய 10 அடி அகலப்பாதை.
தெற்கு: குறித்த படத்தில் 6ஆம் துண்டாகிய மிகுதியாதனம் இதடங்கலும் இதன் தெற்கெல்லையில் இருக்கும் தண்ணீர் தாங்கியும் அதனோடு சேர்ந்த நிலமும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

**ஆதன அட்டவணை 2**

மேற்படி இறை "வாரிவளவு" குளி 14.96. இது மேற்குறித்த படத்தில் துண்டு 7 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை.

கிழக்கு: குறித்த படத்தில் துண்டு 5ஆம், 6ம் இதன்கீழ் வரும் 3ஆம் ஆதனமும்.
வடக்கு: குறித்த படத்தில் துண்டு 4ஆம், துண்டு 6ஆம்,
மேற்கு: குறித்த படத்தில் துண்டு 1ஆம், 2ஆம், 3ஆம்,
தெற்கு: ஜெகதீசன் ஜெயந்தியும் ஆதனம். இன் பத்தடி (10 அடி) பாதையால் 1ஆம் ஆதனத்திற்குப் போக்குவரத்துச் செய்யும் உரித்தும்.

**ஆதன அட்டவணை 3**

மேற்படி இறை "புன்னையாள்வி வளவும் சொடுதலையன் வளவும்" நீத்தான் வளவும் குளி 15.6 இது நில் அளவையாளர் கே. ஐயாறு அவர்களால் 1967.11.04ஆம் 810ஆம் இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 2 எனக் காட்டப்பட்டுள்ளது.
இதற்கு எல்லை.

கிழக்கு: காங்கேசன்துறை றோட்.
வடக்கு: கே.வி. செல்லையாவிற்குரியாதனமும் குறித்த படத்தில் 1ஆம் துண்டு.
மேற்கு: திருஞானசுந்தரம் பெண் இரத்தினம்மாவிற்குரிய ஆதனம்.
தெற்கு: எஸ். சிவகுருநாதருக்குரிய ஆதனம். இவ்வாதனத்தால் 1ஆம் ஆதனத்திற்குப் போக்குவரத்துச் செய்யும் உரித்து மட்டும்.

தற்போது கனகரத்தினம் அன்ரன் ரட்ணதீபன் பெண் தனஜாவும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கனகரத்தினம் அன்ரன் ரட்ணதீபன் பெண் தனஜா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்**
**யாழ் மாநகர சபை.**

(CR 41440) A-1

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பையா செல்லம்மா



பாகுதேவன்புலம் தாவடி வடக்கை பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா செல்லம்மா கடந்த (02.01.2024) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சதாசிவம் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், நாகம்மா, பொன்னம்மா, சின்னம்மா, அன்ன லட்சுமி (ராசாத்தி- New Zealand) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசலிங்கம் (ஓய்வு பெற்ற உதவிக்கல்வி பணிப்பாளர் ஆங்கிலம் - வலிகாமம் கல்வி வலயம்), யோகேஸ்வரலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், மானிப்பாய் இந்து கல்லூரி), சண்முகா தேவி, பரமேஸ்வரலிங்கம் (கணக்காளர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - SLRCS ) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தநாயகி, சோதீஸ்வரி, ராங்கநாதன் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்), ஜோதிலட்சுமி (ஆசிரியர்- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாதங்கி (ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் - வலி வடக்கு பிரதேச சபை), வீணாவாகினி (வங்கி உதவியாளர் - இந்தியன் வங்கி), மதுராந்தகி (ஆசிரியர் - மு/பாரதி மகாவித்தியாலயம்), ரவிதர்ஷன் (பொறியியலாளர்), மாதுரி (பேராதனை பல்கலைக்கழக மாணவி), கஜமுகன் (யாழ். இந்து கல்லூரி மாணவன்), அபிஷஜனி (யா/ உடுவில் மகளிர் கல்லூரி மாணவி), கௌரீசன் (வருமான பரிசோதகர் - வேலணை பிரதேசசபை), கிருத்திகன் (தாதிய உத்தியோகத்தர் - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் பேத்தியாரும், ஹரித்ரா, ஆதிரன், ஆரணன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (03.01.2024) புதன்கிழமை மதியம் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி,**
**இணுவில் தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 27559)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள்
## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



### அமரர் வேலும்மயிலும் சிவபாதசுந்தரம்

**ஓய்வுபெற்ற நில அளவையாளர்**

கடந்த (06.12.2023) அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் வேலும்மயிலும் சிவபாதசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.01.2024) வியாழக்கிழமை அதிகாலை 06:00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

(CS 53385) A-1

நாச்சிமார் கோவில் வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 02 . 1932



இறப்பு 03 . 01 . 2024

### திருமதி சரவணபவன் மங்கையற்கரசி

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரவணபவன் மங்கையற்கரசி அவர்கள் நேற்று (03.01.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணபவன் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மனோன்மணி தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கமலாம்பாள் தம்பதியரின் மருமகளும், கடம்பமலர் (ஓய்வுநிலை அதிபர், யா/ பரஞ்சோதி வித்தியாலயம் - கோண்டாவில்), கலாநிதி, கௌரிபாலன் (பிரதம பொறியியலாளர் உள்ளூராட்சித் திணைக்களம் - திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலராஜா, சுந்தரகுமார் (ஓய்வூதியர், நில அளவை திணைக்களம்), Dr.காயத்திரி (பொது வைத்தியசாலை - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகசபாபதி (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, அம்பிகாபதி, கதிர்காமலிங்கம், சுந்தரலிங்கம், அன்னபூரணி ஆகியோரின் மைத்துனியும், பிரணவன், பிரணவி, கௌரி, பவன், ராம்ஜீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
மகன் - 071 731 4117
மகள் - 077 707 1761

(cs.27554) (N.1)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 26.06.1933

உதிர்வு 03.01.2024

### தர்மலிங்கம் பாக்கியம்

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், பத்தர் கேணியடி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பாக்கியம் அவர்கள் நேற்று (03.01.2024) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் வைத்திலிங்கம் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் சுப்பிரமணியம், காலஞ்சென்ற முருகேசு பரிமளம், காலஞ்சென்ற ஆண்டிஐயா தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுலசிங்கம் தனலட்சுமி, தர்மலிங்கம் சுந்தரசிவம், தர்மலிங்கம் ஜெகரட்ணம் தர்மலிங்கம் லோகேஸ்வரன், அருளானந்தம் லோகேஸ்வரி, சோதிநாதன் புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், வைகுந்தன் தர்மினி, வசந்தகுமார் பிரியதர்சினி, தர்மகுலசிங்கம் துளசி, சுந்தரசிவம் செந்தூரன், சுந்தரசிவம் ஜனனி, ஜெகரட்ணம் உமாசுதன், ஜெகரட்ணம் சிவசுதன், ஜெகரட்ணம் பாசுபதன், லோகேஸ்வரன் கீர்த்திபன், லோகேஸ்வரன் கார்த்தீபன், சிவசங்கர் சாருகா, அருளானந்தம் அருசன், சோதிலிங்கம் அதீசன், சோதிலிங்கம் அபிஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கனகசபை தர்மகுலசிங்கம், சுந்தரசிவம் நகுலேஸ்வரி, ஜெகரட்ணம் வசந்தகுமாரி, லோகேஸ்வரன் எல்வின் ஜெனிற்றா, செல்லையா அருளானந்தம், மார்க்கண்டு சோதிநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், வைகுந்தன் அம்ருதா, வசந்தகுமார் சம்ருதி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 27560) S-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
29 . 04 . 1996

இறப்பு
05 . 12 . 2023



## செல்வி தயானி ஜெகநாதன்

(2 ஆம் வருடம் பௌதிக விஞ்ஞானம். யாழ். பல்கலைக்கழகம் 2016 / 17 - 43 ஆம் அணி)

ஆசைக் குழந்தையம்மா
ஆச்சரிய உண்மையம்மா
அன்பதும் அறிவதும்
அகிலமம்மா - நீ
தெய்வச்சிலை வடித்த
தங்கச்சிலையம்மா

விந்தையான உலகமென்றாய்
வியக்கவைக்கும் விளக்கம் சொன்னாய்
நாம் தளர்ந்த தருணமதில்
தைரியமாய் துணையும் நின்றாய்

கொடியநோய்க் கொடூரம் வெல்ல
கடலதும் கடந்து சென்றாய்
எம் கரம் போதாதென்றா - நீ
இறைகரம் பற்றிக்கொண்டாய்
படைத்தவன் பக்கம் சென்று
பாசமது பகிர்ந்து கொண்டாய்
எமக்கேனோ உன்பிரிவை
ஏற்க மனம் எரியுதம்மா



எமது அன்புச் செல்வம் தயானி நோயுற்றிருந்த பொழுது சகல வழிகளிலும் துணை நின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும், பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும் தொலை பேசியிலும் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் நன்றி பகிர்கின்றோம்.

45/1, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 22[illegible] 9385

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

மலர்வு
27 . 07 . 1945

உதிர்வு
03 . 01 . 2024



## துரைசிங்கம் சிவசுதராசா (குணாளன்)

முதலாம் வட்டாரம் மண்டைதீவினை பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் சிவசுதராசா (குணாளன்) அவர்கள் நேற்று (03.01.2024) புதன்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் இராசமணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்புமிகு மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், சிவபாலினி (ஆசிரியர், முழங்காவில்), சிவதேசினி (ஆசிரியர், வட்டக்கச்சி), தபோதனன் (சிவா, கஜமுகன் மோட்டோர்ஸ் உரிமையாளர்- கிளிநொச்சி), சிவதர்சினி (ஜேர்மனி), தபோதினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அப்பாவும், மகேந்திரன் (தம்பி, அபி மோட்டோர்ஸ் உரிமையாளர் - முழங்காவில்), சூரியகுமார் (சங்கர், வட்டக்கச்சி), அனுலா (கிளிநொச்சி), சண்முகவடிவேல் (ஜேர்மனி), சுரேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசிவாப்பிள்ளை, சபிதகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், லதுசனா, லக்சனா, கம்சா, சதுர்சிகன், பவித்திரன், யதுசன், தர்மிகா, பவீனா, நகிசன், சகிரன், அகிசன், அவனிஸ், பிரணவன், பிரணையன், சானுயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் நாளை (05.01.2024) வெள்ளிக்கிழமை மதியம் இரண்டு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்காவில் அன்புபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே: மகன் - 075 5850 146 (சிவா)
மருமகன் - 077 4943 756 (தம்பி)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27561) A-1


# உடைமையில் கஞ்சா; ஒருவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஜன.4

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதி மன்றம் உத் தரவிட்டது.

சில்லாலை, பண்டத்தரிப்புப் பகுதியில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 3 ஆயிரத்து 60 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட் டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்த னர். (எ-125)

# பன்றி இறைச்சி வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.4

பன்றி இறைச்சியை உடைமையில் வைத் திருந்த குற்றச்சாட் டில் இளைஞர் ஒருவர் கடந்தவாரம் ஊர்காவற்றுறைப் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதிச் சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் இருந்து 25 கிலோ இறைச்சி மீட் கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)


# மரண அறிவித்தல்

மலர்வு
27 . 05 . 1936

உதிர்வு
21 . 12 . 2023



## திருமதி ஞானாம்பிகை இராமநாதன்

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானாம்பிகை இராமநாதன் கடந்த (21.12.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் காமாட்சிபிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற நகேந்திரர் (கொடிவேலி நெடுந்தீவு விதானையார்) செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமநாதன் (பாலசிங்கம் - நெடுந்தீவு) அவர்களின் அன்பு மனைவியும், கலைமகள் (செல்லா) அவர்களின் பாசமிகு தாயாரும், அரவிந்தனின் மாமியாரும், கீரன், ரூபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், மகேந்திரன், இரகுபதி ஆகியோரின் அன்புமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சந்திராதேவி, கணபதிப்பிள்ளை, அமிர்த ரட்ணராஜா, செல்வரட்ணம், இராஜேஸ்வரி, இராமச்சந்திரன், இலட்சுமணராஜா மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2024) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திரு.ப.தேவநாயகம் (J.P.உறவினர்),
மணியகாரன் வீட்டடி,
வேலணை வடக்கு.

திருமதி இ.கலைமகள்
(லண்டன்)
வட்சப் இல.:- +4477 806 90999



# மரண அறிவித்தல்



## திருமதி சூசைப்பிள்ளை றெஜினா

48/14, ஸ்ரேசன் றோட்டை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சூசைப்பிள்ளை றெஜினா அவர்கள் கடந்த (02.01.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், யசிந்தா (கனடா), காலஞ்சென்ற சகாயராஜா, மகிந்தன், கபிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், றொபின், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியும், டொறிங்டன் (கனடா), கனா (கனடா), அனுசா, எலிசா, சாம்சன் ஆகியோரின் அன்புப் பாட்டியும், சிம்சோன், ஆன்றிலா, வியோனா, டியோனா, ஐசாயா, நிலானி ஆகியோரின் அன்புப் பூட்டியும், என்ரி, எ.அன்ரனி, எப்பின், டைசன், சுகிர்தசீலி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை, இன்று (04.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 48/14, ஸ்ரேசன் றோட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

CS (26558) S-1


# மாட்டை இறைச்சியாக்க முயன்றவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.4

மாடொன்றைச் சட்டவிரோத மாக இறைச்சியாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் ஊர்கா வற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 47 வய துடையவர் என்றும், அவர் நீதி மன்ற நடவடிக்கைக்கு உட்படுத் தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். ஊடக அமையத்தால் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குத் தொற்று அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு யாழ். ஊடக அமையத்தால் கடந்தவாரம் டெங்கு விழிப்புணர்வுச் செயற்றிட்டம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக நடைபெற்றது.

"மக்களுக்காக நாம்" என்ற செயற்றிட்டத்தின் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வகுமாரிடம் இருந்து விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரத்தைப் பெற்று செயற்றிட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

யாழ்.போதனா மருத்துவமனை மற்றும் யாழ்.மத்திய பேருந்து நிலையம், வர்த்தக நிலையத் தொகுதி ஆகியவற்றில் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-125)

# யாழ். பல்கலைச் சூழலில் டெங்குக் கட்டுப்பாடு

யாழ்., ஜன.4

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சூழலில் நேற்று டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சுகாதாரத் துறையினர், நல்லூர்ப் பிரதேசசபையினர் இணைந்து கழிவகற்றல் மற்றும் வீடுகளுக்கான களத் தரிசிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏதுவான நிலைகள் காணப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ-125)

## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 04 . 1959



உதிர்வு 03 . 01 . 2024

### நாகராசா சிவராசா

நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா சிவராசா நேற்று (03.01.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்துரை ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், கஜந்தி (பிரதேச செயலகம், உடுவில்), கஜந்தன் (நெடுங்கேணி தண்டுவான் அ.த.க பாடசாலை), தர்சினி (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), தசோதரன் (ருகுணு பல்கலைக்கழகம் 4ஆம் வருடம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாசன் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), கோகுலபவான் (விஜயா ஸ்ரோர்ஸ், உடையார்கட்டு) ஆகியோரின் அன்பு மாமனும், ரித்விதா, சஸ்விதா, அதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஸ்ரீஸ்கந்தராஜா, பாஸ்கரன், செல்வராணி, இறைஞ்சினி ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2024) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 47602) S-1

# ஆஞ்சநேயர் ஜெயந்தி

யாழ்ப்பாணம், ஜன. 4

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய ஆஞ்சநேயர் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து பத்து தினங்கள் பெருவிழா இடம்பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## NP GF 9596 இலக்க லொறி விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் நல்ல நிலையில் உள்ள **NP GF 9596** இலக்க லொறி விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கோரப்படுகின்றது. சங்க காரியாலய நேரத்தில் லொறியினைப் பார்வையிட்டு பின்வரும் தொகைப்பணத்தை காரியாலயத்தில் செலுத்தி கேள்விக் கூறுவிலைக்கான விண்ணப்பப் படிவத்தினை பெற்று 31.01.2024 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கீழ் காட்டப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்க முடியாதது) - ரூபா 1000.00
கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்க கூடியது) - ரூபா 5000.00

கேள்விக் கூறுவிலை தொடர்பாக சங்க இயக்குனர் சபையின் முடிவே இறுதியானது.

**பொது முகாமையாளர்**
**வலி. கிழக்கு வட பகுதி**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**அச்சுவேலி.**

(CR 41447) A-1

## மரண அறிவித்தல்

மலர்வு 28 . 07 . 1931



உதிர்வு 02 . 01 . 2024

### நல்லசேகரம் பரமசாமி சிவக்கொழுந்து

சரசாலை தெற்கு, தெய்வங்கேணி வீதியைப் பிறப்பிடமாகவும், சரசாலை வடக்கு ஐயனார் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லசேகரம் பரமசாமி சிவக்கொழுந்து அவர்கள் நேற்று முன்தினம் (02.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் செங்கமலம் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வியும், காலஞ்சென்ற நல்லசேகரம்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், அமரர் ஞானேஸ்வரி மற்றும் மங்களேஸ்வரி, நாகேஸ்வரி, உதயகுமாரி, விஜயகுமாரி, நாகபுலேந்திரன், சாந்தகுமாரி, புவனகுமாரி நவனகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மார்க்கண்டு, அமரர் திருஞானசம்பந்தர் மற்றும் சதானந்தம், பாலசுந்தரம், சிறிபாஸ்கரன், கமலவதனா, சிவகுமாரன், தேவமனோகரன் உதயகுமார் ஆகியோரின் மாமியும், உதயசூரியன் - காயத்திரி, றஜிதா - ஜெயந்தன், அமரர் விபிசன் மற்றும் ஆரணி - பிரணவன், வைஷ்ணவி, தனுஜன், அபிஷனா, மதுரா, தேனுகா, பூமிகா, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிலாஸ், அட்சரா, அபிசரன், அக்ஷயா, அபூர்வன், ஆரணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2024) வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை கொம்பிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 728 6053 (மகன்)

(CR 41445) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2027 வரையும்...

தற்போதைய நெருக்கடியைத் தணிக்க சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். அந்தத் திட்டத்தில் இருந்து விலகுவது பெரும் பாதிப்பை உருவாக்கும்.

சர்வதேச நாணயநிதியம், உலக வங்கி ஆகியவற்றின் உதவியின்றி எரிபொருள், உரங்கள், மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் போன்றவற்றை இறக்குமதி செய்ய முடியாது. சவால்கள் இருப்பதால் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க தியாகங்களை அனைவரும் செய்ய வேண்டியுள்ளது. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளைக் கடந்து, நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த கூட்டு முயற்சிகள் அவசியமாகும் என்று தெரிவித்தார். (அ-எ-இ)

## வட்டு...

நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றுக்கு வழங்கப்பட்டது. சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞனின் உடலில் காணப்பட்டன என்றும், அதனால் உயிரிழப்பு நேர்ந்துள்ளது எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைகளில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. அவற்றின் அடிப்படையில் முகத்தோற்றளவில் இளைஞனின் உயிரிழப்பு, மனித ஆட்கொலை என நீதிவான் மரண விசாரணை கட்டளையில் குறிப்பிட்டார்.

இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்தனர் என்று வாக்குமூலம் வழங்கியுள்ளார். தற்போதுவரையில் 4 சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றைய சந்தேகநபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என்று வழக்கின் விசாரணை பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தக் குற்றத்தில் பொலிஸார் சம்பந்தப்பட்டிருப்பதால் நீதிமன்ற கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பவேண்டும் என்றும் மன்று கட்டளையிட்டது. வழக்கு விசாரணை ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பாரப்படுத்தவேண்டும் என்றும் நீதிமன்ற பதிவாளருக்கு நீதிவான் அறிவுறுத்தினார்.

கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 16ஆம் திகதிவரை நீதிவானால் நீடிக்கப்பட்டது. (அ-எ-26-66)

## டெங்குக்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் டெங்கு பரவும் அபாயகரமான இடங்களாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் சோதனை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச மட்டங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பிரதேச செயலகஉத்தியோகத்தர்கள் இணைந்து முன்னெடுத்து வரும் விசேட வேலைத் திட்டங்களின்போது டெங்குப் பரவலுக்கு ஏதுவாக அபாயகரமான இடங்களாக அவதானிக்கப்பட்டுள்ள இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கை சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

டெங்குத்தொற்றுதீவிரமடைந்திருக்கும் நிலையில் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். மக்கள் தங்கள் குடியிருப்புகள் மற்றும் அயற்பிரதேசங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். அவற்றைச் சுத்தமாக வைத்திருப்பதுடன், நீர் தேங்கக்கூடிய பொருள்களை அகற்றவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-125-100)

## எதிர்ப்புப்...

இந்தநிலையில், அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவதற்குத் தடை விதிக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுமுன்தினம் மனுவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர். 8 பேரின் பெயர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மனு மீதான விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று நடைபெற்றன. பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி குருபரன் முன்னிலையாகியிருந்தார்.

சமர்ப்பணங்களை அடுத்து, தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்ற பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம், போராட்டங்கள் நடத்துவது மக்களுக்கான ஜனநாயக உரிமை என்றும், அதைத் தடுக்க முடியாது என்றும் குறிப்பிட்டது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏதும் காணப்பட்டால், ஜனாதிபதிக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டு அவரின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டு. பொலிஸாரின் மனுவை நீதிவான் தள்ளுபடி செய்தார். (அ-எ-26)

## டெங்கைத்...

டெங்கு தொடர்பான தகவல்களை 24 மணிநேரமும் பெறவும் முறைப்பாடுகளை வழங்கும் விதமாகவும், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் இந்த இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி பொதுமக்கள் 076 179 9901 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு முறைப்பாடுகள் மற்றும் தகவல் கோரல்களை மேற்கொள்ளமுடியும். (அ-ம)

## ஆணைக்குழுவை...

வலியுறுத்தியுள்ளது. இந்தச் சட்ட வரைவை ஆதரித்தால், ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அல்ல அவர்களின் ஏழு பரம்பரைகளுக்கும் இடிவிழும். அதுமட்டுமல்ல மக்கள் கல்வீச்சுத் தாக்குதலையும் நடத்துவார்கள் எனவும் அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்த ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்ததாவது:-

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சமமாக கவனிக்கப்படவேண்டும் என இமயமலைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது தமிழ் மக்களுக்குத் தற்போது இரண்டாம்பட்ச கவனிப்பே இடம்பெறுகின்றது என்ற தகவலையே இதன்மூலம் சர்வதேசத்துக்கு வழங்க முற்படுகின்றனர்.

யாழில் உள்ள விகாரையொன்றுக்கு பௌத்த மக்கள் செல்வதற்குத் தடை இருக்கலாம். ஆனால் இந்த நாட்டில் தமிழர்களுக்கு எந்தப் பகுதியிலும் அவர்களின் வணக்கஸ்தலங்களுக்குச் செல்வதற்கு எந்த இடையூறும் இல்லை என்பதே உண்மை.

அடுத்தது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு மகாசங்கத்தினரும் தயார் என்ற விம்பத்தையும் இமயமலை பிரகடனம் ஊடாக உருவாக்குவதற்கு முற்படுகின்றனர்.

பொறுப்புக்கூறல் பற்றியும் இமயமலைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. படையினருக்கு எதிராக செயற்பட்ட தரப்பினரே இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

பிரிவினைவாதிகளை அன்றும் திருப்திப்படுத்த ரணில் விக்கிரமசிங்க முற்பட்டார், இன்றும் முயல்கின்றார்.

தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பின்போது, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஜனவரியில் நிறுவப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இந்த ஆணைக்குழு, தென்னாபிரிக்காவில் அமைக்கப்பட்டதைப் போன்று உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மட்டும் அல்ல, பொறுப்புக்கூறல், இழப்பீடு வழங்கல், மீள நிகழாமை போன்ற விடயங்களும் இடம்பெறவுள்ளன. இந்தப் பொறிமுறையை உருவாக்கிய பின்னர், சர்வதேச கண்காணிப்புக்கு இடமளிக்கலாம். ஒரு சில இராணுவத்தினரை போலியான சாட்சிகளுக்குப் பயன்படுத்தலாம். இந்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவானது காட்டிக்கொடுப்பு நடவடிக்கையாகும் - என்றார். (அ-எ-44)

## யாழில்...

ஒன்று தொடர்பாக ஏற்கனவே நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தது. அந்தத் தீர்ப்புக்கு மாறாக மோசடியாகத் தயாரிக்கப்பட்ட உறுதி ஊடாக அந்தக் காணி விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

மோசடியாக எழுதப்பட்ட காணி உறுதிப் பத்திரம் தொடர்பாக அந்த உறுதிப்பத்திரங்களை வரைந்த பிரசித்த நொத்தாரிசும், சட்டத்தரணியுமான ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முன்பிணை விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார். சட்டத்தரணியின் சார்பாக சட்டத்தரணிகளான சயந்தன் மற்றும் செலஸ்ரின் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்த உறுதியை வரைந்த பிரசித்த நெத்தாரிசு உண்மைக்குப் புறம்பாகத் தகவலை இட்டு மோசடியான முறையில் ஆவணம் ஒன்றைத் தயாரித்ததாகக் கூறி அவரைக் கைது செய்யவேண்டும் என்று பொலிஸார் மன்றிடம் வேண்டுகோள் விடுத்தனர். சமர்ப்பணங்களின் பின்னர் கட்டளை நேற்று வழங்கப்படும் என்று நீதிமன்றம் தவணையிட்டது.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம் சட்டத்தரணிக்கு 5 இலட்சம் ரூபா சொந்த சரீரப் பிணை என்ற நிபந்தனையுடன் முன்பிணை வழங்கிக் கட்டளையிட்டது. ஏற்கனவே நடைபெற்றுவரும் காணி வழக்கில் முன்னிலையாகவேண்டும் ஏன்றும் மன்று உத்தரவிட்டது. அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணி மோசடி வழக்குகள் தொடர்பாக இதுவரை 5 நொத்தாரிசுகள் முன்பிணை பெற்றுள்ளனர். சிலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## நேர அட்டவணையில்...

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகும் நிலையில், பரீட்சை நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக விளக்கமளித்த பரீட்சைகள் திணைக்களம், இம்முறை கொரியமொழிப் பாடம் சேர்க்கப்பட்டுள்ளதால், நேர அட்டவணை கடந்தகாலங்களை விடவும் மாற்றத்துக்குள்ளாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த பாடத்தையும் உள்ளடக்கியே உயர்தரப்பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டது. இந்த அட்டவணையில் எந்த மாற்றமும் இல்லை. வழங்கப்பட்ட நேர அட்டவணையின்படியே பரீட்சைகள் நடைபெறும் என்று அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## மறியல்...

மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர்கள் டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டனர்.

படகின் உரிமையாளர் இல்லாத காரணத்தால் படகின் உரிமையாளரையும் இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபராக இணைத்து, சந்தேகநபருக்கு அழைப்பாணை அனுப்ப நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் விளக்கம் வழங்க வேண்டியிருந்தமையால் 12 இந்திய மீனவர்களும் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. (அ-எ-100-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயோதிப பெண் திடீரென மரணம்!

வயோதிப் பெண் ஒருவர் திடீரென வாந்தி எடுத்த நிலையில் உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த த. அன்னமலர் (வயது-69) என்பவரே உயிரிழந்தவராவார். அவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வாந்தி எடுத்த நிலையில், சோர்வாகக் காணப்பட்டுள்ளார். அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

(எ-100)


## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல.158, 193 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கு இணங்க எதிர்வரும் தைபொங்கல் தினத்தை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்



* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி. சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை ஊறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

சிறிராம் ஜுவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

தொடர்பு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334



PERSONAL & GROUP CLASSES

Mathematics & Science
Grade 8 to 11
Wellawatte to Katubedda
English & Tamil Medium

Paul Pratheep. J.R - B.Des(Hons)
076 607 0992 , 075 828 08656


## 6ம் ஆண்டு நினைவுகூறல்

### கனகசபை இலங்கநாதன்



மண்ணில் 17 – 04 – 1940

விண்ணில் 04 – 01 – 2018

'நண்பர்கள் கேளீர்' மற்றும் 'அறம் செய்' அமைப்பு

## அந்தியேட்டி அழைப்பு



மண்ணில் 14 . 09 . 1951

விண்ணில் 06 . 12 . 2023

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (06.12.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயார்

### அமரர் திருமதி சறோஜா சற்குணசிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (05.01.2024) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**46, சம்பியன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**தொ.இல:0777 150 356**
**077 9900 041**

**குடும்பத்தினர்.**

(CS 27575) A-1

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவராசா



தோற்றம் 25.05.1953

மறைவு 03.01.2024

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் பாற்பண்ணை வீதி. திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவராசா நேற்று (03.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும். சிவமலரின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாற்பண்ணை வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 4710 678**

(CS 27601)A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 05 . 1928

இறப்பு 31 . 12 . 2023

### ஆறுப்பிள்ளை சங்கரலிங்கம்

கோண்டாவில் குமரகோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை சங்கரலிங்கம் 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தசாமி, இராசமணி, சிவலிங்கம் மற்றும் சிவராசா ஆகியோரின் சகோதரரும், தயாளினி, காலஞ்சென்ற காயத்திரி மற்றும் றஞ்சினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசதாஸ், தயாபரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுசர்மன் - வஜிரதி (நோர்வே), விகர்ணன் - மோகனராஜி (லண்டன்), காலஞ்சென்ற துருபதன் மற்றும் றஜிதன் - மரியம் (ஜேர்மனி), றம்மியா - நிக்ஷன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புப் பேரனும், டிவாணாவின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சுந்தரலிங்கம், நாகேஸ்வரன் மற்றும் விஜயராணி, சறோஜினிதேவி, நவமணி, வசந்தாமணி, மகேந்திரன் (ஜேர்மனி), இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 27555) S-1

தகவல்: **குடும்பத்தினர்.**

## 8ஆம் ஆண்டு நினைவேந்தல்-04.01.2024

மயிலிட்டி தெற்கு வசாவிளானை பிறப்பிடமாகவும், அம்பாள் வளவு குமரபுரம் பரந்தனை வதிவிடமாகவும், ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட



### அமரர் சின்னத்தம்பி ஆறுமுகம்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி)

அன்புள்ளம் கொண்ட எங்கள் ஐயா!
நீங்கள் எமைவிட்டு பிரிந்து எட்டு ஆண்டுகள் சென்றிடினும்
எண்ணமெலாம் உங்கள் நினைவுகளில்! நீங்கள் எமக்கு காட்டிய
வழியில்நாம் நேராக செல்கின்றோம் இவ்வுலகில் இன்புற்று
வாழ்வதற்காய் ! என்றும் உங்கள் நல்லாசிகளை பிள்ளைகள்,
பேரர்கள், பூட்டப்பிள்ளைகள் எல்லோரும். வேண்டி நிற்கின்றோம்.
உங்கள் ஆசி எமக்கு எப்பொழுதும் கிடைக்கவும், ஆத்ம
சாந்திக்காகவும் சபரிமலை ஐயனை மனதார வேண்டி
நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
"சுவாமியே சரணம் ஐயப்பா"

**நீங்காத நினைவுகளுடன்**
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

அரச ஊழியர் வீட்டுத் திட்டம்
ஓமந்தை, வவுனியா.

(CS 25836) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org